








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 1 1.01.2025



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# நமது ஆண்டவனின் அனுகிரஹத்துடன்

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. பக்த லக்ஷணம்....உண்மையான பக்தர்கள் மற்றவர்களைப் பற்றித் தான் கவலைப்படுவார்கள்.

2. ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் .........கர்மங்களில் பதிமூன்று ப்ரகாரங்கள்

3. விஷ்ணு புராணம் .....நல்லொழுக்கமும் நல்லுலகமும்

4. தவிர்க்க வேண்டிய அபச்சாரங்கள்

5. ஸ்ரீ முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரின் உபந்யாச தொகுப்பு

*****

# 1.பக்த லக்ஷணம்



ஒருசமயம் ராமானுஜர், ஸ்ரீரங்கத்தில் கிருஷ்ணாவதாரம் பற்றி தாம் செய்த உபன்யாசத்தில் கிருஷ்ணன், சலவைத் தொழிலாளியிடம், சலவை செய்த தமது துணிகளைக் கேட்டபோது, அவன் தர மறுத்ததாகக் கூறினார். அன்றிரவு, ஒரு சலவைத் தொழிலாளி ராமானுஜரிடம் வந்து, கிருஷ்ணனுக்கு சலவை செய்த துணிகளைத் தர மாட்டேன் எனக் கூறிய அந்த சலவைத் தொழிலாளிக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ரங்கநாதரின் துணிகளை இனி, நானே துவைத்துத் தருகிறேன் எனக் கூறினான். அப்படியே செய் எனக் கூறினார் ராமானுஜர். அந்த சலவைத் தொழிலாளியும் அடுத்த நாள் முதல் ரங்கநாதரின் துணிகளை வாங்கிச் சென்று பளிச்செனத் துவைத்து, ராமானுஜரிடம் காட்டி, பிறகு கோயிலில் கொடுத்து வந்தான். ராமானுஜரும் அவனை மனமாறப் பாராட்டுவார்.

ஒரு நாள் அவன் ராமானுஜரிடம், நீங்கதான் என்னைப் பாராட்டறீங்க... ஆனால் ரங்கநாதர் பாராட்டலியே என்றான். அது கேட்டு ராமானுஜர் அவனை ரங்கநாதரிடம் அழைத்துச் சென்று, உங்களுக்காக இவன் தினமும் சிரத்தையாக, துணிகளைத் துவைத்துக் கொண்டு வந்து கொடுக்கிறான்! ஒருநாள் அவனிடம் பேசினால்தான் என்ன? எனக் கேட்டார். உடனே ரங்கநாதர் அவனிடம், உனக்கு என்ன வேண்டும் கேள்? என்றார். சாமி, கிருஷ்ணாவதாரத்திலே, உங்களுக்கு துவைத்த துணிகளைத் தர மாட்டேன்னு சொன்னானே... அவனை மன்னித்து அவனுக்கு நீங்கள் முக்தி அளிக்க வேண்டும் என்றான்.

அவனை மன்னித்து விட்டேன். அப்பொழுதே அந்த விஷயத்தை மறந்தும் விட்டேன் என்றார் ரங்கநாதர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ராமானுஜர் கிருஷ்ணாவதாரத்தில் தவறு செய்த ஒருவனுக்காக முக்தி கேட்டியே, உனக்காக நீ ஏன் ஒண்ணுமே கேட்கலே எனக் கேட்டார். அதற்கு அந்தச் சலவைத் தொழிலாளி, அதை நீங்கப் பார்த்துக்குவீங்க சாமி என்றான். இதனைக் கேட்ட ராமானுஜர், மனம் நெகிழ்ந்து அவனை ஆசீர்வாதம் செய்தார்.

உண்மையான பக்தர்கள் மற்றவர்களைப் பற்றித் தான் கவலைப்படுவார்கள்.
தம்மைப் பற்றி நினைப் பதில்லை.
அதை குருவிடம் விட்டு விடுவார்கள்.

***********************************

# 2.கர்மங்களில் பதிமூன்று ப்ரகாரங்கள்
## (ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் -நம்மாண்டவன் வ்யாக்யானத்திலிருந்து)

கர்மங்களில் பதிமூன்று ப்ரகாரங்கள் சேர்ந்திருப்பதாவது:- யதேச்சமாய் தான் நினைத்தபடி செய்து திரியாமல் சாஸ்திரத்திற்கு உட்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு **தபஸ்** என்று பெயர்.

அது மூன்று வகையானது:--
1.சரீரத்தால் செய்யும் தபஸ்,
2.வாக்கால் செய்யும் தபஸ்,
3.மனதால் செய்யும் தபஸ் என்று.

அவைகளாவன:-
(சரீரமானவையாவன -)

1. பகவான், பிராமணர்கள்,ஆசார்யர்கள், மற்ற ஜ்ஞானிகள் இவர்களைப் பூஜிப்பது;
2. ஸ்நாநம், சௌசம் முதலியவைகளால் சரீரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வது;
3. எண்ணத்துக்கும், வார்த்தைக்கும் ஒத்தபடி வெளி வியாபாரங்களைச் செய்வது;
4. பிறர்களுக்கு ஒரு தொந்தரவும் செய்யாமலிருப்பது;
5. பர ஸ்த்ரீகளை ஆசையோடு பார்ப்பது, அவர்களைத் தொடுவது முதலியது இல்லாமலிருப்பது (வாசிகமானவையாவன);
6. அயலாருக்கு க்ஷேமத்தைக் கொடுக்கும்படியான வார்த்தைகளையே சொல்வது;
7. அயலார்க்குத் தொந்தரவை விளைவிக்காததான உண்மையைப் பேசுவது;
8. வேதத்தை உருப்போடுவது (மானஸமானவையாவன);
9. கோபம், அதிருப்தி முதலானது இல்லாமல் எப்போதும் ஸந்துஷ்டமான மனதோடு கூடி இருப்பது;
10. எப்போதும் தெய்வத்தைப் பற்றியும், ஆத்மாவைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருப்பது;
11. மனதை இதர விஷயங்களில் போகாமல் அடக்கி, நினைக்க வேண்டிய ஆத்மாவை எப்போதும் நினைப்பது;
12. ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களை நினையாமை;
13. எல்லாருக்கும் க்ஷேமத்தையே எண்ணுவது.

இப்படி 13 விதமான தபஸ்ஸுகளும் **ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்** என்று அவரவர்களுடைய ஸ்வபாவகுண பேதத்தால் மூன்று வகையாகவும் இருக்கும்.

- ச்ரத்தையோடும் சாஸ்திரப்படிக்கு நன்றாகவும், பலாபேக்ஷையில்லாமலும் செய்கிறவர்களுடைய தபஸ்ஸு, **ஸாத்விகம்** என்று சொல்லப்படுகிறது. அது விசேஷமான தத்வ ஜ்ஞாநத்தையே ஏற்படுத்தும்.
- மனதால் பிரியமாக எண்ணப்படுவது, வாக்கால் கொண்டாடப்படுவது, சரீரத்தால் நமஸ்கரிக்கப்படுவது, சுச்ரூஷைகள் செய்யப்படுவது முதலானவைகளையும் தன் கார்ய ஸித்தியையும் உத்தேசித்துச் செய்யும் தபஸ் ராஜஸம் எனப்படும்.

- ❖ நல்லது பொல்லாததை யோசியாமலும் தன் சக்தியைக் கவனிக்காமலும், பிடிவாதத்தினாலும், அயலாருக்குத் தீங்கு விளைவிப்பதற்காகவும் செய்யப்படும் தபஸ் தாமஸம் எனப்படும். இவை இரண்டும் (ராஜஸம். தாமஸம் ) தத்வ ஜ்ஞாநத்தையே உண்டு பண்ணவே பண்ணாது.

ஆகையால் ஸாத்விகமான தபஸ்ஸோடு சேர்ந்த ஸத்கர்மங்கள்தான் பகவானுக்குப் பிரீதிகரமாய் ஆத்மக்ஷேமத்துக்குக் காரணமாகும். பரமைகாந்திகளுடைய ஸத்கர்மங்களே அப்படிப்பட்டவைகள்.



# 3.விஷ்ணு புராணம்
## வேத வ்யாஸர்
### முதல் அம்சம் 6வது அத்யாயம்

**நல்லொழுக்கமும் நல்லுலகமும்**

தன் வர்ணாச்ரம தர்மங்களைத் தவறாது அனுஷ்டிப்பதனால் செய்யப்படும் ஆராதனத்தால் (பூஜையால்) தான் பகவான் மகிழ்ச்சியடைகிறான். அவனுக்கு அவ்வளவு மகிழ்ச்சியைத் தர வல்லது வேறொன்றும் கிடையாது என்கிறது ஸ்ம்ருதி. இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டிப்பவர்க்கு வரும் மேல் உலகங்கள் பல இங்கு கூறப்படுகின்றன. ஆச்ரமங்கள் நால் வகைப்படும். ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வாநப்ரஸ்தம், ஸந்யாஸம் என்பதே அவை. ஆச்ரமந்தோறும் தர்மங்கள் மாறுபடும். ப்ராஹ்மணர்கள் தங்களுக்குரிய தர்மங்களைத் தவறாது அனுஷ்டிப்பாராகில் அதன் பயனாய் அவர்கள் 'ப்ராஜாபத்யம்' என்ற உயர்ந்த லோகத்தை அடைகின்றனர். ப்ராஹ்மண ஜாதியில் பிறந்ததால் மட்டும் இத்தகைய உலகத்தை அடைந்துவிட முடியாது. அவர்களுக்குரிய நித்ய நைமித்திக கர்மாக்களையும் அனுஷ்டித்தேயாக வேண்டும். அப்பொழுதுதான் அந்த உலகம் கிட்டும். இவ்வாறே யுத்தத்தில் பின்வாங்காத சிறந்த அரசர்களுக்கு இந்த்ர லோகமும், ஸ்வதர்மங்களைச் செய்து வரும் வைச்யர்களுக்கு மருத்துக்களின் லோகமும், மேலோர்களுக்குப் பணிபுரிந்து வரும் நான்காம் வர்ணத்தவர்களுக்கு கந்தர்வ லோகமும் கிடைக்கும்.

குருகுலத்தில் இருந்து கொண்டு குருசுச்ரூஷை பண்ணி வரும் ப்ரஹ்மசாரிகளுக்கு எண்பத்து எட்டாயிரம் யதீச்வரர்கள் நித்யவாஸம் பண்ணி வரும் புண்ய லோகம் கிடைக்கும். வாநப்ரஸ்தர்களுக்கு ஸப்தர்ஷி லோகமும், நற்கர்மாக்களைச் செய்துவரும் க்ருஹஸ்தர்களுக்குப் ப்ராஜாபத்ய லோகமும், ஸந்யாஸிகளுக்கு ப்ரஹ்ம லோகமும் கிடைக்கும் என்று சதுர்முகன் ஸங்கல்பித்தான். இப்படிக் கூறப்பட்ட லோகங்கள் ஸத்கர்மானுஷ்டானத்தின் பயனாய் வரக்கூடியவை.

இனி ஞானத்தால் வரக்கூடிய நல்ல லோகங்களைக் கவனிப்போம்.

கீழ்க் கூறிய ஆச்ரமங்களைச் சார்ந்தவர்களுள் ப்ரஹ்மோபாஸநம் அல்லாத உபாஸநங்களைச் செய்பவர்கள், அதாவது ப்ரதீகோபாஸநம் செய்பவர்கள் பெறக் கூடிய ஸ்தானம், த்ருவ ஸ்தானத்திற்கும் மேல் கங்கை ஆவிர்பவிக்கும் ஸ்தானமான அம்ருத ஸ்தானமாகும்.

பரப்ரஹ்மத்தையே உபாஸிக்கின்ற உத்தமர்கள் நித்யஸூரிகள் ஸதா தர்சனம் செய்து வரும் ஸ்ரீ வைகுண்டத்தைப் பெறுகின்றனர். மற்றைய ஸ்தானங்கள் யாவும் அழியக் கூடியவைகள். அவைகளுக்குச் செல்பவர் சென்று சென்று திரும்புகின்றனர். த்வாதசாக்ஷரத்தை ஜபிக்கின்ற மஹாத்மாக்கள் வைகுந்தமாநகர் புகுந்து மாதவன் மலரடிக் கீழ் அமர்ந்து மீட்சியின்றிப் பெருவாழ்ச்சி பெறுகிறார்கள்.

நல்லவைகளைச் சொல்லி வரும் இவ்விடத்திலேயே கொடியவர்களுக்கு வரும் தீமைகளையும் சொல்கிறார் மஹர்ஷி. இதைக் கண்ட பிறகாவது தீய கார்யங்களை மக்கள் செய்யாமலிருக்கட்டும் என்ற அருள் நினைவே இதற்குக் காரணம்.

நல்லவர்கள் எனச் சிலர் இருந்தால், அவர்களுக்குத் தீங்கிழைக்கும் கொடியவர்களும் பலர் இருப்பார்கள் அல்லவா?

அவர்களாவர்: வேதங்களை நிந்திப்பவர், வேதவிஹிதமான யாகம் முதலியவற்றை அழிப்பவர், ஸ்வதர்மங்களை விடுபவர் என்ற இவர்களே. இவர்கள் பெறும் லோகங்களையும் பாருங்கள்:-

தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், ரௌரவம், மஹாரௌரவம், மிகப் பயங்கரமான அஸிபத்ரவனம், காலஸூத்ரம், அவீசிகம் முதலிய மஹா நரகங்களே அவை.

ஆக இத்தகைய கொடிய நரகங்களுக்கு அஞ்சுபவர் நற்கர்மாக்களைச் செய்து நற்கதி பெறுவார்களாக என்று பராசரர் மைத்ரேயருக்கு மனுஷ்ய ஸ்ருஷ்டியைப் பற்றி விரிவாக அருளிச் செய்தார்.

*****************************************************************************************

# 4.ஸ்ரீ வைஷ்ணவர்கள் தவிர்க்க வேண்டிய அபச்சாரங்கள்

**அபச்சாரங்கள் இரண்டு வகைப்படும்.**

**அவை**
**1. பகவத் அபச்சாரங்கள் ( நாம் இறைவனிடம் செய்யும் தவறுகள் )**
**2. பாகவத அபச்சாரங்கள் ( பகவானின் அடியார்களிடம் , நாம் செய்யும் தவறுகள் )**
**இந்த இரண்டு அபச்சாரங்களும் பெரிய பாவங்களை நமக்கு உண்டாக்கிவிடும்.**

**பகவான் தன்னிடம் , நாம் செய்கின்ற அபச்சாரங்களைக்கூட மன்னித்து விடுவான், அடியார்களிடம் செய்யும் அபச்சாரங்களை மன்னிக்கவே மாட்டான்.**

**பகவத் அபச்சாரங்கள்**

**எம்பெருமானிடம், ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்யக் கூடாத தவறுகள்**

**1, எல்லா இடங்களிலும் வியாபித்து நிறைந்து உள்ள, ஸ்ரீமந் நாராயணனுக்கு இணையாகவோ அல்லது உயர்வாகவோ மற்ற தெய்வங்களை கொண்டாடுவது.**

**2 , சாதாரண தேவதைகளைப் போன்று ஸ்ரீமந் நாராயணனை நினைப்பது.**

**3 , ராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்த எம்பெருமானை, சாதாரண மனிதப் பிறவியாக நினைத்து குறைவாக மதிப்பிடுவது, வாலிவதம் போன்ற நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி செய்வது, அதில் குறைகளை காண முயல்வது.**

**4 , அர்ச்சாவதாரமாக கோவில்களிலும் வீடுகளிலும் எழுந்தருளி இருக்கும் பரமாத்மாவை ஐம்பொன் சிலைதானே என்றும், கற்சிலைதானே என்றும் குறைவாக எண்ணுதல் , வீடுகளில் உள்ள சாளக்கிராமங்களை சாதாரண கல்லாக நினைப்பது.**

**5 , கோவில்களில் அர்ச்சகரிடம் "இந்த சிலை எதனால் செய்யப்பட்டது?" என்று கேட்பது , இந்த விக்கிரஹம் எதனால் செய்யப்பட்டு இருக்கும் என்று மற்றவர்களோடு கலந்து ஆலோசிப்பது .**

**6 , பெருமாளைத் திட்டுவது, வெறுப்பது, கேலி பேசுவது, இல்லை என மறுப்பது**

**7 , புனிதமான கோவில்களையும் கோவில்குளங்களையும் அசுத்தம் செய்வது.**

**8 , எம்பெருமான் உற்சவ காலங்களில் திருவீதி உலா வரும்போது, அந்த உற்சவ முர்த்திகளுக்கு உரிய மரியாதை தராமல் இருப்பது, உற்சவ முர்த்திகளைக் கண்டவுடன் நிலத்தில் விழுந்து வணங்காமல் இருப்பது, அலட்சியம் செய்வது , கேலி செய்வது.**

**9 , ஆத்மாவை இறைவனின் சொத்து என்று நினைக்காமல், நமது என்று நினைத்து சுயநலத்தோடு நடந்து கொள்வது.**

**10 , உயிருள்ள பொருள்களிலும் (சித்),**
**உயிரற்ற பொருள்களிலும் (அசித்)**
**அனைத்திலும் எம்பெருமான் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதில் சந்தேகம் கொள்வது .**

11 , தினமும் எம்பெருமானுக்கு நிவேதனம் செய்யாமல் தான் மட்டும் உணவை உண்பது.

12 , பெருமாளின் கல்யாண குணங்களை விவரிக்கும் ராமாயணம், மஹாபாரதம், நாலாயிர திவ்யப்ரபந்தம் போன்ற புனித நூல்களை, மாத இதழ்களைப் படிப்பது போல அலட்சியமாக படிப்பது.

13 , எம்பெருமானைப் பற்றிய உபந்யாசங்களை கேட்கும்பொழுது, பக்தியுடன் கேட்காமல் இருப்பது, உபந்யாசத்தை கேட்டுக் கொண்டு இருப்பவர்களுக்கு இடையூறாக இருக்கும்படி மற்றவர்களோடு சத்தமாக பேசிக்கொண்டு இருப்பது சிரிப்பது.
புகை பிடித்துக் கொண்டோ, கால்களில் காலணி அணிந்து கொண்டோ கேட்பது, புதிதாக இப்பொழுது இதையும் சேர்த்துக்கொள்ளவேணும்...... இடையிடையே செல்போனில் பேசிக்கொண்டே கேட்பது.

இவை அனைத்தும் பகவத் அபச்சாரங்கள்

உண்மையான ஸ்ரீவைஷ்ணவன், மேலே சொன்ன பகவத் அபச்சாரங்களை செய்யாமல் இருக்கவேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக பாகவத அபச்சாரங்கள்
(அடியார்களிடம் செய்யும் தவறுகள்),

எம்பெருமான் தன்னிடம் தவறுகள் செய்கின்றவர்களை கூட மன்னித்து விடுவான், தன் அடியார்களிடம் தவறுகளை செய்கின்றவர்களை மன்னிக்கவே மாட்டான். ஆகவே அவை எவை என்று பார்ப்போம்.

பாகவத அபச்சாரங்கள் (அடியார்களிடம் செய்யும் தவறுகள்),

1, அடியவரின் ஜாதியைப்பற்றி கேட்பது, இகழ்வது.

2, கருப்பு, வெளுப்பு போன்ற உடல் நிறங்களை வைத்து பேதம் பார்ப்பது.

3, சரீர பேதம் பாராட்டுதல், அதாவது ஆண்தான் உயர்ந்தவர், இவள் பெண்தானே என்று நினைப்பது, இது விலங்குதானே, இது பறவைதானே என்று லட்சியப்படுத்துவது.
( பக்தி செலுத்துவதில் எல்லோரும் சமமே , எம்பெருமான் கஜேந்திர யானைக்கும், ஜடாயு கழுகுக்கும், குயவனுக்கும், குயவனுடைய மண்பாண்டத்திற்கும் கூட , பரமபத பிராப்தி கொடுத்தவன் , ஸ்ரீவைஷ்ணவத்தில் குரங்கும் ஸ்ரீவைஷ்ணவனே ( ஹனுமான், சுக்ரீவன்) கரடியும் ஸ்ரீவைஷ்ணவனே ( ஜாம்பவான்) யானையும் ஸ்ரீவைஷ்ணவனே (கஜேந்திராழ்வான்) , ராக்ஷசனும் ஸ்ரீவைஷ்ணவனே ( விபீஷணன்) பாம்பும் ஸ்ரீவைஷ்ணவனே ( ஆதிசேஷன்) பறவையும் ஸ்ரீவைஷ்ணவனே ( கருடாழ்வார், ஜடாயு )

சரீர பேதமே கிடையாது.

4, குழந்தை, வாலிபம், கிழப்பருவம் ஆகியவற்றைக் காட்டி வேற்றுமை பாராட்டுவது. ( குழந்தையான பக்தபிரகலாதனுக்கும், துருவனுக்கும், கிழவியான சபரிக்கும், தும்பையூர் கொண்டிக்கும் அனுக்ரகம் செய்தான் )

5, பிரம்மச்சாரி, இல்லறத்தான், முனிவன், துறவி என்று வேறுபடுத்துவது ( யாராக இருந்தாலும் பரமபதத்திற்கு செல்ல முடியும், தேவை முமுக்ஷுத்வம் மட்டுமே )

6, நொண்டி, முடம், பார்வை அற்றவர்கள் என்று உடற்குறை காட்டி அவமானப்படுத்துதல்.

7, ஆசாரகுறைவு என்று ஒதுக்குதல்.

8, திருப்பதியில் வசிக்கும் வைஷ்ணவர்கள் உயர்ந்தவர்கள், குப்பத்தில் வசிக்கும் வைஷ்ணவர்கள் தாழ்ந்தவர்கள் என்று நினைப்பது.

9, உறவினர்களில் உண்மையான வைஷ்ணவர் இருந்தால், அவரை வெறும் உறவுக்காரராக மட்டும் நினைத்து அவரை குறைவாக எண்ணுதல்.

10, ஆசார்யர்களுக்கு தரும் மதிப்பை, சாதாரண வைஷ்ணவர்களுக்கு தராமல் இருப்பது.

11, கோவிலிலேயே ஒருவர் செய்யும் தொழில் உயர்ந்தது என்றும், மற்றொருவர் செய்யும் தொழில் தாழ்ந்தது என்றும் எண்ணுவது.

12, வைஷ்ணவர்களை ஞானம் இல்லாதவர்களாக நினைத்துக்கேலி செய்வது.

13, அடியவர்களை நிந்தித்தல், இகழ்தல், சண்டையிடுதல்,அவர்களை அடித்தல்.

14, அடியவர்களின் மனம் புண்படும் படியாக பேசுதல், அவர்களின் பொருள்களைத் திருடிக் கொள்ளுதல்.

15, எம்பெருமானின் திருவடிகளான திருமண்காப்பு தரித்திருப்பவர்களைப் பார்த்து கேலிபேசுதல், ஏசுதல், நிந்தனை செய்தல், அவற்றை அழித்தல் , நிதச்சின்னங்களை அசுத்தமாக்குதல்.

16, வைஷ்ணவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்று பிரச்சாரம் செய்தல்.

17, எங்கள் ஆசார்யன்தான் உயர்ந்தவர், உங்கள் ஆசார்யன் தாழ்ந்தவர் என்று மற்றவர்களிடம் கூறுவது

இவை அனைத்தும் பாகவத அபச்சாரங்கள்.

*********************************************************************************************



# 5.ஸ்ரீ முக்கூர் லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரின் உபந்யாச தொகுப்பு



எந்த அவதாரம் எடுத்தாலும் பகவானுடைய நேத்திரத்துக்குப் பங்கமில்லை. அதிலும் எல்லா அவதாரத்தைக் காட்டிலும் நரஸிம்ஹ அவதாரத்திலே விசாலமான திருநேத்திரம். இதை ஈசுவரனே எடுத்துச் சொல்கிறான்.

நன்கு விரிந்த திருநேத்திரங்களால் நரஸிம்ஹன் தனது பக்தர்களைக் குளிரகடாக்ஷிக்கிறான் என்பது ஈசுவரன் வாக்கு.
அந்த நேத்திரங்களால் அனுக்ரஹம் பண்ணுகிறான். நிக்ரஹம் என்பதை அறியாதவன்.
நரஸிம்ஹ மந்திரம் 32 அக்ஷரங்களைக் கொண்ட உயர்ந்த மந்திரம்.
அவதார காலத்தில் பகவான் விசால நேத்திரத்துடன் இருந்ததைச் சொல்கிறது.
சீற்றத்தோடு அருள் பெற்றான் ப்ரஹலாதன்! கோபமாகவிருந்தால் கண்களில் அனல் பறக்கும்.

ஆனால் இங்கே பாருங்கள்...
ஹிரண்யகசிபுவை பகவான் தீக்ஷண்யமாகப் பார்க்கிறான்; அதே சமயம் ப்ரஹலாதனை வாத்ஸல்யமாகப் பார்க்கிறான்.
இரண்டும் ஏக காலத்திலே நடக்கிறது.
ஒரே சமயத்தில் நேத்திரம் இரண்டு விதமாக வேலை செய்கிறது.

ஹிரண்ய கசிபுவை தீவிரமாகப் பார்க்கிறான. ப்ரஹலாதனை அனுக்ரஹமாகப் பார்க்கிறான்!
இது எப்படி என்று ஸ்ரீதரீய வியாக்யானம் என்கிற விளக்கத்தில் சொல்லியிருக்கிறது.
சிம்ஹம் இருக்கிறதே...அது மற்ற பிராணிகளை தீக்ஷண்யமாகப் பார்க்கும்.
தனது குட்டியை வாத்ஸல்யமாகப் பார்க்கும்.
அந்த மாதிரி, ப்ரஹலாதன் - குழந்தை - பக்தனானதாலே வாத்ஸல்யமான பார்வையை அவன் மீது செலுத்தினான் பகவான்.
தன்னிடத்திலிருப்பதை இழந்து கூக்குரலிட்டுக் கத்தக் கூடியவர்களை ஓடி வந்து ரக்ஷிக்கக் கூடிய குணம் படைத்தவன் எம்பெருமான்.
அது மட்டுமல்ல,
ஐச்வர்யத்தைக் கொடுக்கும்படியான உயர்ந்த குணமும் அவனிடத்தில் இருக்கிறது.
உயர்ந்த ஸ்தானத்தை நமக்குக் கொடுக்கும் படியான சக்தி அவனிடமிருக்கிறது.
பாபத்தை அழிக்கும்படியான சக்தி அவனிடத்தில் இருக்கிறது.
இப்படி விசேஷமான குனங்கள் அவனிடத்தில் இருப்பதனாலே அவன் திருவடியைப் பற்றுங்கள் என்கிறது நரஸிம்ஹ மந்திரம்.

**ஹரியை தியானம் பண்ணுங்கள் -**
**ஏனென்றால்,அவனிடத்தில் வாத்ஸல்யம் இருக்கிறது.**
**அடி பணிந்தவர்களை வந்து ரக்ஷிக்கக்கூடிய உயர்ந்த குணம் அவனிடத்தில் இருக்கிறது.**